# வலயக்கல்வி அலுவலகம் வவுனியா தெற்கு

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா/த) முன்னோடிப் பரீட்சை – 2016**

**விவசாயமும் உணவுத் தொழில்நுட்பவியலும் I** | **ஒரு மணித்தியாலயம்**

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. இலங்கை விவசாயத்தில் தன்னிறைவை அடைந்து வருகின்றது.விவசாயத்தில் அடங்கும் பிரதான துறைகளாவன
   1) பயிர் செய்கையும் விலங்கு வளர்ப்பும்
   2) பயிர் செய்கையும் நீர்ப்பாசனக் கைத்தொழிலும்
   3) விலங்கு வளர்ப்பும் வனச்செய்கையுமாகும்
   4) விலங்கு வளர்ப்பும் மீன்பிடிக் கைத்ததொழிலும்

2. ஒரு குளத்தின் கொள்ளளவிலும் அதிக நீர் கிடைக்கும் போது மேலதிக நீரை வெளியேற்றும் அமைப்பு எது
   1) கலிங்கற்தொட்டி
   2) வான்கதவு
   3) அலைதாங்கி
   4) குளக்கட்டு

3. சமநிலை உணவின் மூலம் ஆரோக்கியமான சமுதாயத்தைப் பேணலாம். சமநிலை பேண உணவில் அடங்க வேண்டியவை
   1) மாப்பொருள் இலிப்பிட்டு வெல்லம் புரதம் கொழுப்பு
   2) காபோவைதரேற்று மாப்பொருள் கொழுப்பு புரதம் கனிப்பொருள்கள்
   3) காபோவைதரேற்று இலிப்பிட்டு புரதம் விற்றமின் கனிப்பொருள்கள்
   4) மாப்பெதருள் புரதம் விற்றமின் கனிப்பொருள்கள்

4. இலஙகையை விவசாய காலநிலைவலயங்களாக பிரிக்கப்பட்டிருப்பதன் அடிப்படைக் காரணிகள்.
   1) மழைவீழ்ச்சி வெப்பநிலை
   2) குத்துயரம் வெப்பநிலை
   3) குத்துயரம் ஈரப்பதன்
   4) மழைவீழ்ச்சி குத்துயரம்

5. வளியில் உலர்த்தப்பட்ட மண்மாதிரியை உள்ள கிளை கொண்ட அரிதட்டினால் அரித்த பின்னர் அரிதட்டில் காணப்படுவது
   1) பரல்களாகும்
   2) பருமணலாகும்
   3) பரல்களும் பருமணலும்
   4) மென்மணலும் பருமணலும்

6. களிமண்ணுடன் ஒப்பிடும் போது மணல்மண்
   1) இடைவெளி குறைவானது
   2) ஒட்டும் தன்மை கூடியது
   3) மண்வளி குறைவானது
   4) சொரசொரப்பான இழையமைப்பையுடையது

7. அளவுச்சாடி ஒன்றினுள் 80$Cm^3$ மண்ணை இட்டு அதற்கு 100 $Cm^3$நீரை சேர்த்த போது கலவையின் கனவளவு 150 $Cm^3$ஆகியது அம் மண்மாதிரியில் காணப்பட்ட வாயுக்களின் கனவளவானது
   1)180 $Cm^3$ 2)150 $Cm^3$ 3)30 $Cm^3$ 4)100 $Cm^3$

8. இலங்கையின் ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் பரந்து காணப்படும் மண்வகை
   1) செங்கபில மண்ணாகும்
   2) செம்மஞ்சள் பொட்சோல்
   3) அலூவியல் (வண்டல்) மண்ணாகும்
   4) இருவாட்டி மண்ணாகும்

9. பொயேசியே தாவரக்குடும்பத்தைச் சேர்ந்த பயிர்களைக் கொண்ட தொகுதி
   1) பாகல் பீர்க்கு புடோல்
   2) நெல் கங்குன் இறுங்கு
   3) நெல் சோளம் திணை
   4) பாகல் சுரை புடோல்

10. பயிர்களை நாட்டியபின் அம் மண்ணுக்கு மேற்கொள்ளப்படும் அனைத்து நடவெடிக்கைகளும் அழைக்கப்படுவது
   1) இடைப்பண்படுத்தல்
   2) முதற்பண்படுத்தல்
   3) துணைப்பண்படுத்தல்
   4) ஆரம்பப்பண்படுத்தல்

11. நாற்று மேடையிலுள்ள நாற்றுக்களை அதிகளவில் தாக்கும் நாற்றழுகல் நோய்க்கான காரணி
   1) வைரசாகும்
   2) பற்றீரியாவாகும்
   3) நெமற்றொட்டாகும்
   4) பங்கசாகும்

12. வோ்த்தொகுதிக்குப் பாதிப்பு ஏற்படாமல் மண்ணுடன் சேர்ந்து நாற்றைப் பெயர்த்து மேற்கொள்ளும் நாற்றுமேடை வகை
   1) டபொக் நாற்றுமேடை
   2) நெரிடோக்கா நாற்றுமேடை
   3) சேற்ற நாற்றுமேடை
   4) புாத்தி நாற்றுமேடை

13. மண்ணில் புதைக்கப்பட்ட நுண்துளைகளைக் கொண்ட மட்குடத்தைப் பயன்படுத்தி பின்வரும் எப்பயிருக்கு வெற்றிகரமாக நீர்ப்பாசனம் செய்யலாம்
   1) நெல் 2) மிளகாய் 3) சணல் 4) மிளகு

14. பயிர்ச் செடிகளுக்கிடையேயான இடைவெளியை தீர்மானிக்கும் காரணிகள்
   1) பயிரின் வயது
   2) பயிரின் இலைகள் பரவுந்துாரம்
   3) பயிரின் வேகம் பரவுந்துாரம்
   4) பயிருக்கு நீர் பாய்ச்சும் முறை

15. நீர் குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் பயன்படுத்த மிகவும் உகந்த நீர்ப்பாசன முறை
   1) சால் நீர்ப்பாசனம்
   2) துளி நீர்ப்பாசனம்
   3) பாத்திப் பாசனம்
   4) தூவல் நீர்ப்பாசனம்

16. நிலம் பண்படுத்தலின் போது அடிக்கட்டுப் பசளை இடப்பட்டது இதன் மூலம் வயலுக்குக் கிடைக்கும் போசணை மூலகங்களாவன
   1) N ,K 2) P,K 3) N,P 4) N,P,K

17. நெற்செய்கையின் போது களைகளை வெற்றிகரமாக கட்டுப்படுத்த மிகப் பொருத்தமானது
   1) பொறிமுறை
   2) இரசாயணமுறை
   3) உயிரியல்முறை
   4) ஒன்றிணைந்த கட்டுப்பாடு

18. மண்வெட்டியால் செதுக்கி அகற்றி கட்டுப்படுத்த முடியாத களை கொண்ட தொகுதி
   1) கோரை ஆனையறுகு
   2) கீழ்க்காய் நெல்லி ஆனைச்சுவடி
   3) குப்பைமேனி கோரை
   4) சீதேவியார் செங்கழுநீர் காட்டுச்சேம்பு

19. விவசாயி ஒருவர் பாகல் செய்கையின் போது பெரமோன் பொறியைப் பொருத்தியிருந்தார் இதன் மூலம் அவர் கட்டுப்படுத்த எதிர்பாக்கும் பீடை
   1)எப்பிலக்கினா
   2)ஏபிட்டு
   3)பழஈ
   4)அவுலக்கபோரா

20. நெற் செய்கையின் போது பாற்பருவத்தில் சாற்றை உறிஞ்சிக் குடிக்கும் பீடை
   1)சந்துகுத்தி
   2)நெல்மூட்டுப் பூச்சி
   3)பனிப்பூச்சி
   4)அறக்கொட்டியான்

21. இன்டோல் அசற்றிக்கமிலம் இன்டோல் பியூற்றிக்கமிலம் நப்தலின் அசற்றிக்கமிலம் ஆகிய இரசாயணங்களை விவசாயத்தின் போது பயன்படுத்துவது

1)பூச்சிகளைக் கட்டுப்படுத்த
2)துண்டுத்துண்டங்களை வேரூண்டச் செய்ய
3)நூற்றுக்களில் பங்கசுக்களை கட்டுப்படுத்த
4)பழவகைகளை பழுக்கச் செய்ய

22. தாவர ஒட்டுதல் வெற்றியளிப்பதற்கு ஒட்டுக்கட்டை ஒட்டுமுனை ஆகியவற்றலுள்ள எந்த இழையங்கள் நன்கு தொடுகையுற வேண்டும்

1) காழ் 3)மாறிழையம்
2)உரியம் 4)மேற்பட்டை

23. வேர்தண்டுக் கிழங்கு மூலம் பெருக்கக்கூடிய தாவரங்களாவன

1)மஞ்சளும் இஞ்சியும் 3)பொன்னாங்காணியும் வல்லாரையும்
2)வற்றாளையும் மரவெள்ளியும் 4)உருளைக்கிழங்கும் வல்லாரையும்

24. சினைப்படுத்தப்பட்ட பசுவிலிருந்து பால் கறப்பது இறுதி இரண்டு மாதங்களிலும் நிறுத்தப்படும் இக்காலப்பகுதி எவ்வாறு அழைக்கப்படும்

1)வற்றுக்காலம் 3)கறவைக்காலம்
2)கர்ப்பகாலம் 4)வேட்டைக்காலம்

25. அறுவடை செய்யப்படும் போது தக்காளிப்பழங்கள் வெடித்துக் காணப்படின் இதற்கான காரணம்

1) அதிக ஒளி காணப்படல்
2) மண்ணின் நீர்ப்பரப்பு குறைவு
3) நீண்ட வரட்சிக்குப்பினனர் மழை கிடைத்தல்
4) அதிக மழைவீழ்ச்சி

26. இவற்றள் நைதரசன் பசளை குறைந்தளவில் இடப்படக்கூடிய பயிர்த் தொகுதி

1) பாகல் பூசணி பீர்க்கு 3) நெல் சோளம் குரக்கன்
2) பயறு உழுந்து அவரை 4) வல்லதரை பசளி கங்குன்

27. நுண்ணங்கிகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பால் உற்பத்திப் பொருள்

1) நற்காப்பச் செய்யப்பட்ட பால் 3) செறிவூட்டப்பட்ட பால்
2) பட்டர் 4) யோக்கட்

28. மண்ணின்றிய பயிர்ச்செய்கைக்கு வளர்ப்பூடகமாக உபயோகிக்க மிகப் பொருத்தமான திண்மப் பொருள்

1)மரத்தூள் 3)தென்னந்தும்பு
2)வைக்கோல் 4)தேங்காய்மட்டைத்துண்டுகள்

29. இலங்கையில் காணப்படுகின்ற ஆக்கிரமிப்புக் களை ஒன்று

1) குப்பைமேனி 2) ஆனையறுகு 3) சல்வீனியா 4) கோரை

30. கோழிகளுக்கு ஏற்படும் கொக்கிடியோசிசு நோய்க்குரிய நோய்க்காரணி

1) வைரசாகும் 3) நெமற்றொட்டாகும்
2) பற்றீரியாவாகும் 4) பங்கசாகும்

31. இயற்கை மற்றும் செயற்கை நற்காப்பு பதார்த்தங்களை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட இறைச்சி உற்பத்திப் பொருள்

1) சோயாமீற் 2) யோக்கட் 3) பேக்கன் 4) சொஜேசஸ்

32. நீரில் நன்கு கரையக் கூடியதும் வெண்ணிறக் கோளவுருவானதுமான இரசாயணப் பசளைவகை

1) அமோனியம் சல்பேற்று 3) மியூரியேற்றுப் பொட்டாசு
2) யூரியா 4) N,P,K

33. பின்வருவனவற்றுள் மண்ணிண்றிய பயிர்ச்செய்கையின் போசணை ஊடகமாக பயன்படுத்த மிக உகந்தது எது

1) போடோ கலவை 3) ஏகார் ஊடகம்
2) அல்பேட் கரைசல் 4) மண்புழுப் பசளைக் கலவை

34. இலங்கையில் உலர்வலய பிரதேசங்களில் வளர்க்க சிபார்சு செய்யப்பட்ட பற்பசு வர்க்கம்
   1) அயர் சயர்
   2) பிறிசியன் சுதேச கலப்பினம்
   3) பிறீசியன்
   4) சிந்தி சுதேச கலப்பினம்

35. புரத கலோரிக் குறைபாட்டின் மூலமாக ஏற்படக்கூடிய நோய் நிலை
   1) குவாசியக்கோர்
   2) பீற்றோவின் புள்ளிகள்
   3) மலேரியா
   4) பெரி பெரிநோய்

36. இலங்கையில் தரமற்ற குடிநீர் போத்தல்களினால் ஏற்படும் பாதிப்புக்களை தவிர்க்க வழங்கப்படும் தர நியமக் குறியீடு
   1) ISO  2) SLS  3) LD50  4) SLSI

37. பாலை 8-12 மாதங்கள் வரை பழுதடையாது பாதுகாக்க பயன்படுத்த கூடிய நற்காப்பு முறை
   1) கிருமியழித்தல்
   2) குளிரேற்றியில் வைத்தல்
   3) பரச்சராக்கம் செய்தல்
   4) இரசாயணப் பதார்த்தங்கள் சேர்த்தல்

38. சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட தகரத்திலடைக்கப்பட்டமீன் கொள்கலனின் மேற்புறமும் கீழப்புறமும் உப்பி பருத்து காணப்பட்டது. இதற்கான காரணமாக அமைவது
   1) ஆதிக மீன் அடைக்கப்பட்டிருத்தல்
   2) அதனுள் நுண்ணங்கிகள் வளர்ச்சியடைதல்
   3) அதிக கதிர்வீச்சுக்கு உட்பட்டிருத்தல்
   4) கொள்கலன் மெல்லிய உலோகத்தால் ஆக்கப்பட்டிருத்தல்

39. குறைந்த மழைவீழ்ச்சியம் அதிக வெப்பநிலையும் நிலவும் பற்றைக் காடுகளை கொண்ட கடினமான சூழலில் வளர்க்க மிகப் பொருத்தான விலங்கு வகை
   1) பன்றி  2) மாடு  3) கோழி  4) ஆடு

40. சூழல் நேயம் மிக்க வீட்டுத் தோட்டம் ஒன்றில் பீடையாக அமையும் பூச்சிகளை விரட்டுவதற்கு பயன்படுத்த உகந்த தாவரம்
   1) முள்முருங்கை
   2) கிளிசீரிடியா
   3) செவ்வந்தி
   4) இப்பில் இப்பில்

The National e-learning Portal for the General Education